விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 12 இதழ் 14
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-2-1994

# மணலாறு பகுதியில் டாங்கி சிதறியது; 4 இராணுவம் பலி

## புலிகள் அதிரடி தாக்கு

(மணலாறு)

மணலாறு பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் டாங்கி ஒன்று அழிக்கப்பட்டதுடன் அதிலிருந்த 4 படையினர் உடல்சிதறிப் பலியாகினர். மேலும் 6 படையினர் படுகாயமடைந்தனர். கஜபாகு முகாமிலிருந்து பராக்கிரமபுர முகாமிற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## போர் விமானங்கள் பலாலி விரைவு

(பலாலி)

நேற்று 4 மணியளவில் இரண்டு போர் விமானங்கள் பலாலியை நோக்கிச் சென்றதை காணக் கூடியதாயிருந்தது.

யாழ். மாவட்டத்தில் தாக்குதலெதுவுமின்றியே இப்போர் விமானங்கள் வந்திருக்கலாமென்று யூகிக்கப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க கடந்த [illegible] முன்னே-பூநகரி கடல் பிராந்தியத்தில் பீரங்கிப் படகு ஒன்றும் சிறிய படகுகள் இரண்டும் நிற்பதாக தெரியவந்துள்ளது.

-59

# ★ யாழ். வரும் பொருட்களுக்கான கப்பல் கட்டணத்தை அரசு தற்காலிகமாக நீக்கியுள்ளது!

## அரச அதிபருக்கு தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் உணவுப் பொருட்களுக்கான கப்பல் கட்டணத்தை யாழ். அரச அதிபர் வழங்க வேண்டும் என்ற நிபந்தனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபருக்கு நேற்று தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் தவிர்ந்த கப்பல் மூலம் கொண்டுவரப்படும் ஏனைய பொருட்களுக்கான கப்பல் கட்டணத்தை இனிமேல் அரச அதிபரே பொறுப்பேற்க வேண்டுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்திருந்தார். இதையடுத்து கப்பலினூடும் உணவுப் பொருட்களுக்கான கட்டணத்தை பொதுமக்களி

(6ம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித் தடை மார்ச் 1ல் இருந்து நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடல் நீரேரிப் பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கப் போடப்பட்டிருந்த தடை மார்ச் 1ம் திகதியிலிருந்து நீக்கப்படுவதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவித்தலை யாழ். அரச அதிபருக்கு அரசு நேற்று அறிவித்தது. இத்தடையால் ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே

## கொழும்பில் ஸ்திரமற்றநிலை

### இதனால்தான் தமிழர் கைது

(கொழும்பு)

தெருவிலே ஒருமணி நேரம் கைது செய்ய யாருக்கும் உரிமையில்லை. எனவே கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவார்கள் எனக் கூறுவது தவறு; குண்டுகள் வெடித்து வருவதன் விளைவாகவே அப்பகுதியில் தற்போது ஸ்திரமற்ற நிலை உருவாகி வருவதால் தமிழர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என பிரிட்டனுக்கான இலங்கை தூதர் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## டி. பி., ரணில் பாதுகாப்பு அமெரிக்கர் படையிடம்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விசேட பாதுகாப்பு வழங்குவதற்காக, அமெரிக்க இரகசிய உளவுப் பிரிவு ஒன்று விரைவில் இலங்கைக்கு வரவிருக்கிறது.

எதிர்காலத்தில் ஜனாதிபதியினதும், பிரதமரினதும் பாதுகாப்புக்கான அனைத்துப் பொறுப்புகளும் இவர்களிடமே ஒப்படைக்கப்பட இருப்

(6-ம் பக்கம் பார்க்க)

## பருவமழைமுடிந்துவிட்டதால் யுத்தம் மீண்டும் ஆரம்பம்?

(கொழும்பு)

இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தத்தை இதுவரை பிற்போட்டு வைத்திருந்த பருவமழை முடிவடைந்ததை தொடர்ந்து இரு தரப்பினருக்கிடையேயும் மீண்டும் யுத்தம் ஆரம்பித்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

மணலாறில் நேற்றும், நேற்றுமுன்தினமும் இடம் பெற்ற மோதல்களும் வடக்கில் கடந்த சில தினங்களுக்கு முன்பாக நடைபெற்ற விமானத் தாக்குதல்களும் இதை உறுதிப்படுத்துவதாகவும் பி

(5-ம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் சில உள்ளூர் பாவனைப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

பருப்பின் சில்லறை விலை 2 ரூபாவாலும் மொத்த விலை 7 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ பருப்பு 46 ரூபாவாக விற்கப்படும். இதன் மொத்த விலை 42 ரூபாவாகும். தேங்காய் எண்ணெயின் விலையும்

(6-ம் பக்கம் பார்க்க)

## யுத்த முயற்சி தீவிரமாகிறது

### சமாதானப் பேச்சுக்கே இடமில்லை

(கொழும்பு)

வடபகுதியில் மிகப்பெரும் தாக்குதலை தொடுக்க இராணுவம் தயாராகி வருவதாலும் அதை எதிர்கொள்ள விடுதலைப் புலிகளும் பல ஆயத்த வேலைகளில் இறங்கியிருப்பதாலும் தற்போதைக்கு சமாதானப் பேச்சுக்களுக்கு இடமிருப்பதாக தெரியவில்லை என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்: சமாதான பேச்சுக்கு வருமாறு அரசு புலிகளுக்கு அழைப்பு விடுத்தது. அதற்கு புலிகளும் சம்மதித்தனர். வடக்கே சென்று வந்த சமாதான குழுக்களும் சமாதான பேச்சுக்களுக்கு புலிகள் தயாராயிருப்பதாக அரசுக்கு கூறினர்.

ஆனால் அதை தொடர்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் வழங்க சிறிமா கோருகிறார்

(கொழும்பு)

தென். மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சி வேட்பாளர்களுக்கும் ஆயுதங்களும் பாதுகாப்பும் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கோரியுள்ளார்.

இது குறித்து அவர் அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதுடன் பொலிஸ் மா அதிபருடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார். தமது கட்சி ஆதரவா

(6-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வர்ண வேலைகள்

விளம்பரப் பலகை, இலக்கத் தகடுகள், மனித உருவப் படங்கள், கடைவர்ணம் தீட்டுதல், வீடுகள் வர்ணம் தீட்டுதல், கோலங்கள் வரைதல், சாமி உருவப்படங்கள் ஆகிய வர்ண வேலைகளும் குறித்த தவணையில் ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும். பூபதி ஆட்ஸ். தொடர்பு முகவரி: டிக்கா லாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வாவுவிக் கூல்பார் அருகாமையில்)

(எ 3845)

### 25 வருட அனுபவம்

இருபத்தைந்து வருட அனுபவமுள்ள அனுபவசாலியின் கைவண்ணத்தில் சகல பழைய, புதிய, சுவர் மணிக்கூடுகள், மேசை மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா லாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வாவுவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(எ 3842)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பிநிசம், தலையிடி, தலைச்சுற்று, சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைப்படுதல், கருவழிதல், மலட்டுத்தன்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி வி. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

(இ-771

### மணமகன் தேவை

யாழ் விஷ்வ இந்து குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு மணமகன்கள் தேவை. (1) வயது 35 அரசாங்க ஒப்பந்த வேலைகள் செய்பவரும், கட்டிடப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலையின் உரிமையாளரும். (2) வயது 34. ஜேர்மனியில் 8 வருடமாக ஒரு தொழிற்சாலையில் வேலை செய்பவர் 3 வயது – 28 (A. C. M. A) கனடாவில் அரசாங்க திணைக்களத்தில் கணக்காளராக வேலை செய்பவர். முழு விபரங்களும் முதல் கடிதத்தில் தெரிவிக்கவும். விளம்பர இல:- C-819, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

இ-819)

### உங்கள் வாழ்வை சீர்படுத்திக் கொள்ள..,

பலருக்கு அதிர்ஷ்டமான எண்ணில் பெயர் இல்லாது விட்டாலும், துரதிஷ்டமான பெயர் இருக்கிறது. வாழ்க்கையில் தடைகள், மாறாத நோய்கள் நீங்க, உங்கள் பெயரைச் சீரமைத்துக் கொள்ள, மற்றும் பலன்கள் விளக்கங்களுடன் "ஸ்ரீவாணி எண் ஜோதிடம்" எனும் விற்பனைக்கு வந்திருக்கின்றன. விலை ரூ 25/-

(சி-826)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## இளம் கலைஞர் மன்றம்

# 14 - வது இசைவிழா

இடம்: கலா மண்டபம்

சட்டநாதர் வீதி, நல்லூர்.

13ம் நாள்

**24-2-94 வியாழக்கிழமை**

**யாழ். நியூ ஹப்பி ரெக்ஸ்ற் ஆதரவில்**

மாலை 4-00 — 5-00 மங்கள இசை

அளவை கே. துரைராஜா குழுவினர்

5-00 — 5.15 பாட்டு

பாட்டு

| | |
|---|---|
| எஸ். உதயராணி | பி. கௌதமி |
| எஸ். ஜெயராணி | எஸ். ஜனுதினி |
| எஸ். தமிழ்ச்செல்வி | எஸ். பவதாரிணி |
| பி. தர்சிகா | எஸ். அஷாந்தி |
| எஸ். ரஜினி | வி. சிவரஜினி |
| எஸ். ஸ்ரீசாந்தினி | |

சுகிர்தா — வயலின்

ஜஉட் ஜெமில்ராஜ் — மிருதங்கம்

5-15 — 5 35 வீணை இசை

வீணை

செந்தில்செல்வி செந்தில்நாதன்

துஷ்யந்தி தில்லைச்சந்திரன்

பாலகுமாரி துரைராஜா

ஆண்டாள் இராஜலிங்கம்

எஸ். துரைராஜா — மிருதங்கம்

5-50 — 6-15 பாட்டு

துளசி அம்பிரத்தினம் — பாட்டு

ஆர். எஸ். மோகனமூர்த்தி — வயலின்

கே. ஆதவன் — மிருதங்கம்

6-15 — 7-00 பாட்டு

கனகாம்பி பத்மநாதன் — பாட்டு

சாந்தநாயகி சுப்பிரமணியம் — வயலின்

கே. கண்ணதாசன் — மிருதங்கம்

7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்

திரு. ச. கற்பகநாதன் (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)

திரு. கு. ரவிச்செல்வன், என். லோகநாதன் (சாவகநகர்)

திரு. எஸ். மனோகரன் (சிலவை)

அருள் உரை:

பிரம்மஸ்ரீ எஸ். சுந்தரேஸ்வரக் குருக்கள்.

(பிரதமகுரு பெருமாள் கோவில்)

தலைவர்:

திருமதி வி. இராமநாதன்

(அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

பிரதம விருந்தினர்:

திருமதி பி. கணேசலிங்கம்

(பிரதிக் கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி)

சிறப்பு விருந்தினர்:

திருமதி ச. சௌந்தரராஜா

(அதிபர், யாழ்/இந்து மகளிர் கல்லூரி)

7-30—8-30 இருவயலின் இசை:

ஆர். ராதாகிருஷ்ணன், எஸ். கோபிதாஸ் — வயலின்

கே. கண்ணதாசன் — மிருதங்கம்

சதா வேல்மாறன் — கடம்

எஸ். ராஜா — முகர்சிங்

8-30 — 9-30 பரதநாட்டியம்

"நாட்டியக் கலா கேந்திர மாணவிகள்"

தயாரிப்பு:

கிரிஷாந்தி ரவீந்திரா, ருஷினி சேனாதிராசா

வாழ்த்துவோர்:

**சிறி நதியா ஜுவல்லர்ஸ்**

**2 ஜி, ஸ்ரான்லி வீதி,**

யாழ்ப்பாணம்.

(ஏ 3826)


# 30,000 பேர்

## யுத்தத்திற்குப் பலி!

(கொழும்பு)

இந்த நாட்டில் கடந்த பத்து வருடங்களாக இடம்பெற்று வரும் இனயுத்தத்தில் இன்று வரை 30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஒருகோடி 70 லட்சம் சனத்தொகை கொண்ட இந்த நாட்டில் தமிழ் மக்களின் சனத்தொகை 12 சதவீதமாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தைக்கான தருவாயில் மூப்படையவில்லை தமிழர் பிரச்சினை தொடர்பாக யாருடன் நான் பேசவேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன் என்றார்.

(இ - வி)


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பேராசிரியர் உடலமைப்பியல் / நோயியல் / சட்ட மருத்துவம் / மனநோயியல் / மருந்தியல் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம் / சமூக மருத்துவம்
2. சிறப்பொப்பந்தகசு - அங்கக்கோணல் அறுவை மருத்துவம் / மகப்பேறியல்.
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் - உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / உயிர் ரசாயனவியல் / உடலமைப்பியல் / நோயியல் / சட்ட மருத்துவம் / மருந்தியல் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம் / நுண்ணியிரியல் / ஒட்டுண்ணியியல்
4. தற்காலிக விரிவுரையாளர் - உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / உயிர் ரசாயனவியல் உடலமைப்பியல் / நோயியல் / சட்ட மருத்துவம் / மருந்தியல் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல்
5. தற்காலிக உதவி விரிவுரையாளர் - அனுமருத்துவம் (பெண்நோயியல்)
6. தற்காலிக செய்முறை காட்டுநர் - உயிர்ரசாயனவியல் / நோயியல்.
7. பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி.

**சம்பள அளவுத்திட்டம்:**

**பேராசிரியர்:**

ரூபா 16,100 — 6X400 - 18,500/- மாதமொன்றிற்கு

**சிரேஷ்ட விரிவுரையாளர் II**

ரூபா 10,650 — 5 X 325 - 12,275/- மாதமொன்றிற்கு

**விரிவுரையாளர் (மருத்துவம்)**

(ரூபா 6,050 — 10 X 250 - 8,550/- மாதமொன்றிற்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின்போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 6050/- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமான அதாவது 6550/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்)

**தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்)**

ரூபா 6550/- மாதமொன்றிற்கு (நிலையானது)

**தற்காலிக உதவி விரிவுரையாளர்**

ரூபா 5270/- மாதமொன்றிற்கு (நிலையானது)

**தற்காலிக செய்முறைக் காட்டுநர்**

ரூபா 4420/- மாதமொன்றிற்கு (நிலையானது)

**பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி**

ரூபா 7,300 — 10 X 250: 10 X 325 - 13,050/- மாதமொன்றிற்கு

குறிப்பு: இத்துடன் 1994 டிசம்பர் 31ம் திகதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தில் 15 சதவிதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1994-05-11 ஏனைய பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி: 1994-03-25

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்தியபின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தபாலகிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 X 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகளின் விண்ணப்பதாரர்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் சிறப்புத்தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: ஒப்பந்த அடிப்படையில் நியமனமும் கவனிக்கப்படும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

1994-02-15

(எ 3852)

மணிவாக்கு

கல்வியும் தனமும் எந்தப் பிராயத்திலும் தொடங்கலாம்.
- மகாகவி பாரதி

# நமது நோக்கு

## கொடூரச் சித்திரவதை!

சர்வதேசச் சட்டங்களை மீறும் வகையில், எதேச்சாதிகாரமான முறையில் கொழும்பில் ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படையினரால் கைது செய்யப்படுகிறார்கள்; சித்திரவதைகள் மூலம் வாக்குமூலங்கள் பெறப்படுகின்றன.

இப்படியான கண்டனம் தெரிவித்துள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை!

சுற்றிவளைப்புகளும், ஒட்டுமொத்தமான கைதுகளும் தொடருகின்றன. விடுவிக்கும் ஒரு வியாபாரமாக வளர்ந்து விட்டது என்றும் செய்திகள் பல வந்தன.

இதுபற்றிப் பல தலைவர்கள் அரசோடு பேச்சுவார்த்தைகள் நடாத்தினார்கள்; பல இணக்கங்கள் உருவாக்கப்பட்டன. வழமையான ஒப்பந்தங்கள் மீறப்படுவது போல், வாக்குறுதிகளும் திட்டங்களும் மீறப்பட்டன.

அரசோ, கண்டும் காணாத மாதிரி, கேட்டும் கேளாத மாதிரி, "அப்படியா சங்கதி! ஆகட்டும் பார்க்கலாம்!" என்ற அலட்சியப் போக்கையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கிறது!

இத்தகைய போக்குக்குக் காரணம் என்ன? அவர்கள் தமிழர்கள் தானே, பெரிய விருக்ஷத்தில் படர வேண்டிய கொடிகள்தானே என்ற ஆணவப் போக்கு வெளிப்படையாகவே தெரிவிக்கப்படும்போது, படையினர் தட்டிக் கொடுக்கப்படுகிறார்களா? அல்லது தட்டிக் கேட்கப்படுகிறார்களா?

இத்தகைமைகள் அனைத்தும் சர்வதேச சட்டங்களை மீறிய செயல்களாகும் என மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியுள்ளது. சட்டங்கள் மாத்திரமா மீறப்படுகின்றன? பொதுப் பண்பாடுகள் நிலை என்ன?

மன்னிப்புச்சபை அறிக்கையே சுட்டிக் காட்டுவது ஒரு சம்பவமே போதுமே, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல!

கைதுசெய்யப்பட்ட ஒருவர் மீது மேற்கொண்ட சித்திரவதையின் போது, மிகக் கேவலமான முறையில், உறுப்பு நீக்கச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

படையினரின் மனப்போக்கு, இன்னமும் போக்கு எப்படியுள்ளது என்பதை உலக சமுதாயம் அறிய இது நல்ல வாய்ப்பாகுமல்லவா?

கல்வித் தராதரத்தைக் குறைத்த போதிய பயிற்சி அளிக்காது, நாட்டைக் காக்கும் பொறுப்பைக் கொடுப்பதால் ஏற்படும் விளைவு இதுதானா?

இந்த லட்சணத்தில், மனித உரிமைக் குழுக்களுக்குப் படையினர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் கூறப்படுவது ஆச்சரியமானதா?

# இராஜ கிராம முன்னேற்றத்தில் விடுதலைப் புலிகளின் பங்கு

தமிழர்கள் பேரார் புலத்திலும், பொருளாதாரத்தை பேணுவதிலும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் காணுதலிலும் முதன்மையானவர்கள் என்று இன்று முத்திரை குத்தப்பட்டுள்ளது.

இந்த உன்னத நிலையிலுள்ள தமிழர்களுக்குள்ளே ஒரு சாரார் கல்வியின்றி, அறிவு குன்றி பொருளாதாரத்திலும் மந்த நிலையோடு வாழும் அவல நிலைகள் காணப்படுகின்றன.

வடமராட்சிப் பகுதியில் நெல்லியடிச் சந்தியிலிருந்து 400 யார் தூரத்தில் கரவெட்டி மேற்கு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி தெற்கு, மத்தோனி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய ஸ்ரீ நாரதா வடால ராஜ கிராமம், சந்திரான், கணுவில், அரசடி, மத்தொனி, உச்சில்சணமுனை, வெல்லான் கண்டி, பிராமணன் தோட்டம் ஆகிய கிராமங்களைப் பார்க்கும்போது இவர்களின் நிலைப்பாடு, இவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு இடையூறாக உள்ளதென்பது தெரிகிறது.

அடிப்படை வசதிகளின்றி அறிவுகுன்றிய நிலையில் வாழும் அந்த மக்களை மீட்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் முழு வேகத்துடன் செயற்படுவதை, பத்திரிகையாளர்களை நேரில் அழைத்துக் காட்டினார்கள்.

"இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள். கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், மன நிலை, பழக்கவழக்கம் ஆகியவற்றில் முதிர்ச்சியின்றி இருக்கிறார்கள். இவர்களை இக்குறைபாடுகளிலிருந்து மீட்டெடுத்து உடனடியாக நிரந்தர நிம்மதியான வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதே எமது குறிக்கோளாகும்" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி பத்திரிகையாளர் மாநாட்டில் எமக்குத் தெரிவித்தார்.

எட்டு வயதுக்கும் பதினாறு வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் பற்றி ஆய்வு செய்த போது கன்பொல்லை கிராமத்தில் 200 சிறுவர்களும், ஸ்ரீ நாரதா கிராமத்தில் 250 சிறுவர்களும் வடால கிராமத்தில் 80 சிறுவர்களும் ராஜகிராமத்தில் 200 சிறுவர்களும் பாடசாலைப் பக்கம் செல்லாது இருக்கின்றனர்.

## மணிசேகரன்

கரவெட்டி வடக்குப் பகுதி இடைக்குறிச்சியில் 80 சிறுவர்களும் மத்தோனியில் 13 பேரும் உச்சிலில் 43 பேரும், கண்டியில் 9 பேரும் வெல்லனில் 17 பேரும் மத்தொனியில் 79 பேரும், கண்டியில் 53 பேரும், பிராமணன் தோட்டத்தில் 13 பேரும் பாடசாலைக்கு செல்லாதிருக்கின்றனர்.

இவர்கள் ஏன் இந்நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதை எமக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு உதவிப் பொறுப்பாளர் தமிழவள் பின்வருமாறு விபரிக்கிறார்.

இக்குடும்பங்களில் தாயும், தந்தையும் தொழிலுக்குப் போகிறபடியால் குடும்பத்தில் வளர்ந்த கூடிய சிறுவர்கள் மற்றக் குழந்தைகளை பராமரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் கல்வி புறக்கணிக்கப்படுகிறது.

இவர்களை மீட்கும் முயற்சியில் பல புனரமைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த இருக்கிறோம். பாலர் கல்வி, பாடசாலைக் கல்வி முதியோர் கல்வி ஆகியவை நடைமுறைப்படுத்தி கல்வியில் ஒரு ஊக்கத்தை கொடுக்க இருக்கிறோம். தாயும் தந்தையுமாக பராமரிப்பு அமைப்பை அறிமுகப்படுத்த இருக்கிறோம். இதில் நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் நன்மையடையப் போகிறார்கள். மற்றும் மாதர் சங்கங்கள், நூல் நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பல முன்னேற்றகரமான அமைப்புகளும் தொடங்க இருக்கிறோம் என்றார்.

இக்கிராமங்களை மேலும் உன்னோக்கினால் அடிப்படை சுகாதார சுகாதார வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. நெல்லியடி நகரத்துக்கு அண்மையில் இப்படியொரு கிராமம் ஏன் சுகாதார வசதிகளோடு அமையவில்லை என்று கேட்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவு பரிசோதகர் திரு. சிவசுப்பிரமணியம் "இக் கிராமத்திலுள்ளவர்களுக்கு சுகாதாரம் பற்றிய அறிவுரைகள் குறைந்து காணப்படுகிறதென்றார்.

இவர்களை மீட்டு எடுக்கும் நோக்கோடு கிராமிய மேம்பாட்டுத்திட்டம் வரையப்பட்டு, இக் கிராமங்களின் பிரச்சினை ஆராய்ந்து வெற்றிகொள்ளும் நோக்கில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், விடுதலைப்புலிகள் வெளியீட்டுப்பிரிவு, மகளிர் பிரிவு போன்ற பல இணை அமைப்புகள் 'கிராமப் பாசறையும் கண்காட்சியும்' என்ற நிகழ்வுகளோடு இம் மக்களை அணுகியிருக்கிறார்கள். அவசரமாக முன்னேற்றப்பட வேண்டிய பகுதி இராஜ கிராமமாக இருந்தாலும் அதற்கடுத்தாற் போன்று மற்றைய கிராம மக்களும் முன்னேற்றமடைவைப்பது ஒவ்வொரு தமிழ் மக்களின் கடமையாகும்.

## இராசிபலன்

24- 02 - 1994

வியாழக்கிழமை

(தமிழுக்கு மாசி 12)

திரயோதசி மு. ப. 10-37 வரை, பூசம் மு. ப. 8-57 வரை. அமிர்தசித்தயோகம் இராகுகாலம் பகல் 2-00 முதல் 3-30 வரை, சுபநேரம் காலை 8-00 மணி முதல் 9-30 வரை, நடேசராபிஷேகம்.

மேஷம்: உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், மனப்பயம், வெறுப்பு.

இடபம்: தாமதமான விவாதம், தொழில் சிறப்பு, பணிவிடை.

மிதுனம்: அதிகாரிகள் இனம், குடும்ப கவலை, தன் பரி பகை.

கடகம்: குடும்ப மகிழ்ச்சி, வெளியூர் தகவல், பயண நன்மை.

சிங்கம்: வைனக்குறைவு, சொந்த விஷய பாதிப்பு, கடன்படல்.

கன்னி: கருத்து மோதல், இனசன உறவு, வரவு.

துலாம்: விரோதிகள் உதவி, நோய் தணிவு, பொதுப்பணி.

விருச்சிகம்: மனப் போராட்டம், பெண்பகை, தடுமாற்றம்.

தனுசு: மூர்க்கத்தனம், இரத்தக்குழுதல், சகோதர வேதனை.

மகரம்: காரியசித்தி, தொழில் உறவு, உற்சாகம்.

கும்பம்: வெகுமதி, மனச்சிறப்பு, சந்தோஷச் செய்தி.

மீனம்: எதிர்பாராத திருப்பம், புறங்கூறுதல், தொழில் நஷ்டம்.

— ஜோஸ்யர்.

## தவக்கால நற்சிந்தனை

"ஆண்டவரே! உம்மையன்றி வேறு துணை ஏதுமில்லாத எனக்கு உதவி புரிந்தருளும்" (எஸ்தர். 14:14)

பரமனையன்றிப் பாவிகளுக்கு உதவக் கூடியவர் இங்கு எவரும் இல்லை. எத்தனை ஆபத்துக்கள், இன்னல்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டாலும், பாவோடு காக்கும் பரம தந்தையவர். எமக்கு எத்தனை துன்பங்கள், துயரங்கள் நேர்ந்தாலும் இறைவன் ஒருவரே எமது துணை; அவரே எமது கேடகம்.

- ஜோ. த

**வீணாகும் தண்ணீர் - நம் வாழ் நாளில் கண்ணீர்**


## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்தின்
வருடாந்த பொதுக் கூட்டமும்
புதிய நிர்வாகிகள் தெரிவும்

எதிர்வரும்

**23 - 4 - 1994 சனிக்கிழமை**

பிற்பகல் 3 மணிக்கு

யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில்

நடைபெறும்.

★ இக்கூட்டத்தில் சங்க அங்கத்தவர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளவும்.

★ அங்கத்தவர்கள் பெயர் பட்டியல் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

டே. மரியதாசன்,
செயலாளர்,

**யாழ். வர்த்தக ஊழியர் சங்கம்,**
யாழ்ப்பாணம்.

(ஏ-3850)



அறவழிப் போராட்டக் குழுவின்
**16-வது சேவை ஆண்டினை**
முன்னிட்டு
ஜேர்மன் ஜன நாயகக் குடியரசின்
புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ்
அமைக்கப்பட்ட

**அறவழி பயிலகம்**

## ★ திறப்பு விழா ★

எப்போது ? **25 - 02 - 1994 வெள்ளி**

எந்நேரம் ? காலை 10 மணி

எங்கே ? **கண்டி சாலை,**
கைதடி, நுணாவில்.

பிரதம விருந்தினர் :
திரு. ஜோன் குட்காண்ட் அவர்கள்
(மாவட்ட இணைப்பாளர், சிறுவர் பாதுகாப்பு நிதியம்)

முதன்மை விருந்தினர் :
திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள்
(பிரதேசச் செயலர் — சாவகச்சேரி)
திரு. சிவநாத் அவர்கள்
(அரசியல் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப்புலிகள், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர் :
டாக்டர் கே. ரீ. சிவபாதம் அவர்கள்
(தலைவர், லயன்ஸ் கழகம், சாவகச்சேரி)
திரு. அ. நல்லதம்பி அவர்கள்
(உப தலைவர், ரீ. ஆர். ஆர். ஓ.)
திரு. த. நவரத்தினராசா அவர்கள்
(விசேட ஆணையாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி)

★ அன்பர்கள், ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**- NVDAG -**

க. ஜீவகதாஸ்,
செயலாளர்,
**அறவழிப் போராட்டக் குழு,**
29, கைதடி — நுணாவில், சாவகச்சேரி.

(கி-820)

# பசுமைப் புரட்சி தமிழீழத்தின் எழுச்சி

எங்கள் தாயகத்தை
பச்சை நிறமாக்கி பட்டினியிலிருந்து
பாதுகாக்கும் விவசாயிகளே!
நாங்கள் போர் கோலம் பூண்டது போல்
மக்கள் ஏர் கோலம்
பூண்டாக வேண்டிய புதுப்பணி
காத்துக்கிடக்கிறது!
உறுதியுடன் நின்று
உற்பத்தியைப் பெருக்குவோம் - இன்று

நெல் அறுவடை முடிந்து - நிலம்
உங்களுக்காகக்
காத்துக்கிடக்கின்றது
வயலை உழுது பயறு, உழுந்து
கௌபி, எள், நிலக்கடலை போன்ற
உபஉணவுத் தானியங்களை
உற்பத்தியாக்குவோம்!
ஒரு அங்குலநிலத்தையும் தரிசாகவிடாது
தானியக் களஞ்சியமாக்குவோம்

## உங்களுக்கான சகல விதைகளையும் உடனடியாக தமிழீழபொருண்மியமேம்பாட்டுநிறுவனத்தின் வட்டத் தொடர்பாளர்களின்

## பசுமை | விவசாய சேவை

## நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்

**அமைவிடங்கள்:**

1. கோப்பாய் : நீர்வேலி சந்தி, நீர்வேலி
2. சண்டிலிப்பாய்: கட்டுடைச்சந்திசண்டிலிப்பாய்
3. உடுவில் : மானிப்பாய் வீதி, உடுவில்
4. நல்லூர் : முடமாவடி, நல்லூர்
5. கோண்டாவில் : இருபாலைவீதி,கோண்டாவில்
6. சங்கானை : பிரதான வீதி, சங்கானை
7. கரவெட்டி : பருத்தித்துறை வீதி, நெல்லியடி
8. பருத்தித்துறை: மந்திகைச் சந்தி
9. கைதடி : கண்டி வீதி, கைதடி
10. சாவகச்சேரி : கண்டி, வீதி சாவகச்சேரி
11. கொடிகாமம் : கச்சாய் வீதி, கொடிகாமம்
12. பளை : கண்டி வீதி, பளை

★ விவசாயத் தேவைக்குரிய உள்ளீடுகளான உரம் கிருமிநாசினி
விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை வழங்க
"பசுமை விவசாய சேவை" காத்திருக்கின்றது.

(ஏ-385I)

## பசன் கன்றுகள் முற்றிலும் இலவசம்

**(Passion Fruit Plants)**

ஜாம் மூடியுடன் 400g ஹொர்லிக்ஸ், வீவா போத்தல்களில் ஏதாவது ஐந்து (5) எம்மிடம் ஒப்படைக்கும் போது போத்தல்களுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் பசன் கன்று ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ளவரை மட்டுமே.

**TASTE LINE INDUSTRIES**
**( Pvt. ) Ltd,**

No: 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பசன் பழங்களை நாம் கொள்வனவு செய்கின்றோம்.

(ஏ-8857)



சிவமயம்

## நீங்கா நினைவு



அமரர்
சங்கீதத்தரணி
**எம். எஸ். சுந்தரலிங்கம்** அவர்கள்

பண்புடையேந்தல் செம்மல் சுந்தரலிங்கப் பேரோன்
நண்பு செய்யுமினிய தொண்டோன் நமக்கெல்லாம்
அன்பு செய்வோன்
முன்புசெய் புண்ணியத்தால் முத்தமிழ் அறிஞனை
இன்புடன் இருந்தான்; அந்தோ இறைவனே யாண்டு
கொண்டான்

எங்களின் உற்றநண்பன் இங்கித உணர்வு
கொண்டோன்
தொண்டுளே வழக்கென்றிட்டால் கற்றையும் ஆடிக்
கொள்வோன்
திண்டிறல் உரமும் கொண்டோன் தீர்க்கதரிசனமு
முள்ளான்
பண்டைய கதைகள் கூறும் பாங்குகோர்
எடுப்பாகுமே!

நன்றுகள் பலவுஞ்செய்து நயம்பட வாழ்ந்த செம்மல்
தொண்டுகள் புலவதெங்ஙுல் துடிப்புடன் செயலில்
நிற்போன்
இன்றுள பணிகள் எம்மால் இயற்றுதற் குதவி
செய்தோன்
கண்டிலோம் ஐயா! உம்மைக் கருத்தழிகின்றோம்
இங்கு!

வை. கந்தப்பச்செட்டியாரும்
குடும்பத்தினரும்.
வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்
யாழ்ப்பாணம்.

(ஏ 3856)


## இன்று

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் வாசக சிந்தனை விழா இன்று இந்து மாமன்ற தலைவர் திரு. எம். பி. அருளானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (சி)

★

(யாழ்ப்பாணம்)
கைதடி கல்வாணி வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பி. ப. 2-00 மணியளவில் அதிபர் பசுபதிச்செல்வத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திரு பூ. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார்.

★

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவை கௌரவிக்கும்முகமாக இன்று பி. ப. 4-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் சாந்தோ கண்காட்சி நடைபெறவுள்ளது. (சி)

★

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை ஆத்திப்புலம் சந்திரசேகர விநாயகர் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது நாளை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.
154-சி

★

(யாழ்ப்பாணம்)
யாழ். கீரிமலை புனித தீர்த்தம் இன்று இறைத்துத் துப்பரவுசெய்யப்படவிருக்கிறது. தீர்த்தக் கேணியின் பெருமதிமிக்க பொருட்களைத் தவறவிட்டவர்கள் தீர்த்தக் கேணி நிர்வாகத்துடன் இன்று தொடர்புகொள்ளுமாறு புனித தீர்த்த பரிபாலனசபை கேட்டுக்கொள்கிறது.

★

யாழ். பல்கலைக்கழக புவியியல் கழகம் நடாத்திவரும் கருத்தரங்குத் தொடரின் மூன்றாவது அமர்வு இன்று 24ம் திகதி வியாழன் பிற்பகல் 3-00 மணிக்கு புவியியற்துறை விரிவுரை மண்டபம் இல. 2ல் நடைபெறவுள்ளது. இதில் யாழ். பல்கலைக்கழக அரசியற்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ். கே. நாதன், ''அவுஸ்திரேலியாவில் உயர்கல்வி வாய்ப்புக்கள்'' எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

## வெளிச்சம் இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழின் மாசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய ''சுதந்திரம் இல்லையேல் வாழ முடியாது'' என்ற செய்தியும் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும், பிரம்மஞானி தொடராக எழுதிவரும் 'மனிதனும் மரணமும்' என்ற கட்டுரையும் இன்னும் புதுவை இரத்தினதுரை, இ. திருமாறன், சுபா, தூயவன், தவபாலன் ஆகியோரின் கவிதைகளும், நிர்த்திரன் சிவஞானசுந்தரத்துடன் நேர்காணலும் இடம் பெறுகின்றன. இதற்றுடன் 'என் இனியவளுக்கு' - கேணல் கிட்டுவின் கடிதங்கள், நூலுக்கான வே. பாலகுமாரன் மதிப்புரையும்; மணலாறு விஜயன், பொலிகை ஜெயா ஆகியோரின் சிறுகதைகளும், செ. கிருஸ்ணராசாவின் வரலாற்றுக் கட்டுரையும் வன்னி நாடகத்தின் நாடகமொன்றும் உள்ளன இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் 'வெட்டுமுகம்' சிறுகதைத் தொகுதி, 'கோலங்கள் ஐந்து' நாடக நூல் என்பவற்றுக்கான மதிப்பீட்டுரையை சோ. கிருஸ்ணராசாவும், சோ. பத்மநாதனும் எழுதியுள்ளனர். இது வெளிச்சத்தின் இருபத்துமூன்றாவது இதழாகும்.

## பருவமழை

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பி. பி. ஸி கூறியது.
இறுக்கிக் கேர்தல் நடைபெறவுள்ள இவ்வேளையில் கிழக்கிற்கு அருகே மணலாறில் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் கிழக்கு தேர்தலை குழப்பும் முதல் அசைகையாக இருக்கலாம் எனவும் பி. பி. ஸி. கூறியது. (சி)


## நோயாளர் நலன்புரிச் சேவை

நோயாளர்களின் பராமரிப்பாளர்களாகப் பணிபுரிய விரும்பும் எந்த வயதினைச் சேர்ந்த இருபாலாரும் தத்தமது தகைமைகளுடன் குடும்ப விபரங்களையும் குறிப்பிட்டு நோயாளர் நலன்புரிச் சங்கம் இல. 572 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 01-03-94க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**நிர்வாகப் பொறுப்பாளர்**

நோயாளர் நலன்புரிச் சங்கம்

யாழ். போதனா மருத்துவமனை

(சி-822)



## வேலை வாய்ப்பு

### உள்ளகக் கணக்குப் பரிசோதகர்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (Diploma in Accountancy) சான்றிதழ் அல்லது சீ. ஐ. எம். ஏ. (C. I. M. A.) பகுதி 1—3 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
1லும் 2லும் குறிப்பிடப்பட்டவர்கள் பிரபல தனியார் / அரச நிறுவனங்களில் 3 வருட அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.


3. அரசாங்க / தனியார் சேவையில் இருந்து இளைப்பாறியவர்கள் ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் கணக்குப் பகுதியில் வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள்
**25-02-1994, 26-02-1994**
ஆகிய தினங்களில் காலை 10-00 மணிக்கு
தங்கள் விண்ணப்பத்துடனும்
சான்றிதழ்களுடனும்
காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் 30-ம் இலக்க இல்லத்திற்கு நேரில் வரவும்.

இல. 30,
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(ஏ-3854)





உறுதியான கணனிக் கல்விக்கு
வெலிங்டன் சந்திக்கருகில்

# UNIKCO
## COMPUTER CENTRE

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- ★ WORD PROCESSING (Wordstar Rel - 5. 5) and MS - DOS
- ★ d BASE III PLUS and MS- DOS
- ★ LOTUS 1-2-3 and MS-DOS
- ★ BASIC LANGUAGE (Sound Graphics and Files)
- ★ காலை, மாலை வகுப்புகள் ★ தமிழில் விளக்கங்கள்
- ★ கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- ★ PRACTICALS ON IBM Compatibles

ஆரம்பம்:- 5-3-1994 (வார இறுதி நாள் வகுப்புகள்)
4-3-1994 (வார நாள் வகுப்புகள்)

JOIN WITH US TO STUDY
THE LATEST COMPUTER TECHNOLOGY

மேலதிக விபரங்களுக்கு:-

**37, CLOCK TOWER ROAD**
**JAFFNA**

ஏ-3855)

